**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**பரங்கிப்பேட்டை.**
**2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18-ஆம் நாள்,**
**CC. 39/2016**

The Oaths Act 1969 (Act 44/1969)-ன் விதிமுறைகளின் படி 18.03.2026-ஆம் தேதியன்று பரங்கிப்பேட்டை, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திரு.த.யுவராஜ் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. அழகேசன் | வயது | : | 58 |
| த.பெ | : | திரு. கலியபெருமாள் | நிலை | : | **PW-4 (LW-6)** |

**Accused called absent. Defence counsel filed petition u/s 317 of Cr.P.C, perused and allowed. Learned APP is Present.**

**அரசு தரப்பில் முதல் விசாரனை -**

1) நான் தற்போது குறவன்மேடு, பாலாறு வீதியில் வசிக்கிறேன். விவசாயம் செய்து வருகிறேன். இந்த வழக்கு விபத்தில் இறந்த திருமாவளவன் எனது உறவினர். அவர் நீதிமன்றத்தில் வேலை செய்கிறார். அவர் சுமார் 10 வருடங்களுக்குமுன்பு 2016-ல் இந்நீதிமன்றம் புதியதாக ஆரம்பித்தபோது அந்த நிகழ்ச்சியை முடித்துவிட்டு வீட்டிற்கு அவரது இருசக்கர வாகனத்தில் சென்றபோது பெரியப்பட்டுவில் உள்ள பரணி பள்ளியின் அருகே சிதம்பரம் - கடலூர் ரோட்டில் ஜல்லி ஏற்றிவந்த லாரி டிப்பர் ஒன்று வடக்கிலிருந்து தெற்குநோக்கி வந்து லாரிக்கு எதிரே வந்த திருமாவளவனின் இருசக்கரம் வாகனத்தின்மீது மோதி விபத்து ஏற்பட்டதாக அங்கிருந்தவர்கள் போன்மூலமாக தகவல் சொன்னார்கள். தகவலறிந்து நானும்,தனசேகரன்,ரகு ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தோம்.

2) பரணி பள்ளி அருகே இறந்தவர் தலை வடக்காகவும், கால் தெற்காகவும் கிடந்தார். கடலூர் - சிதம்பரம் சாலையில் ரோட்டிற்கு மேற்குபுறமாக கிடந்தார். அவர் ஓட்டிவந்த இருசக்கர வாகனம் சேதமாகி கிடந்தது. மோதிய டிப்பர் லாரி சம்பவ இடத்தில் இருந்தது. பின்னர் திருமாவளவனின் உடலை கடலூர் அரசு மருத்துவமனை சவக்கிடங்கிற்கு எடுத்து சென்றனர். 27-02-2016-ஆம் தேதியன்று புதுச்சத்திரம் காவல் ஆய்வாளர் திருமாவளவனின் பிரேதத்தின்மீது கடலூர் அரசு மருத்துவமனையில் விசாரணைசெய்தபோது நானும் உடனிருந்தேன்.போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

இறந்த திருமாவளவன் எனது அக்கா மகனாவர். விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்திற்கு போலிசார் அழைத்தார்கள் என்றால் சரிதான். சம்பவத்தன்று காவல் நிலையத்திற்கு எங்கள் ஊரைச் சேர்ந்த சுமார் 7 நபர்கள் சென்றோம், அப்போது இரவு நேரமாக இருந்ததாக ஞாபகம். காவல் நிலையத்திற்கு வந்தவர்களிடம் போலிசார் பெயர்,முகவரி போன்ற விவரங்களை எழுதிக்கொண்டனர் என்றால் சரிதான். அதன்பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.இறந்தவர் எனது அக்கா மகன் என்பதாலும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கினங்க எனது முதன்மை விசாரணை சாட்சியத்தை சொல்லியுள்ளேன் என்றாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சம்பவம் நடந்த நேரத்தில் நான் வேறு இடத்தில் பணியில் இருந்தேன் என்றால் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் சரியல்ல, நான்தான் 108 ஆம்புலன்ஸ்ஸில் அனுப்பி வைத்தேன்.

**சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டிய பின்பு அவர் சரியென கையொப்பமிட்டார்.**

**(ஒம். திரு.த.யுவராஜ்)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**பரங்கிப்பேட்டை.**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**பரங்கிப்பேட்டை.**
**2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18-ஆம் நாள்,**
**CC. 39/2016**

The Oaths Act 1969 (Act 44/1969)-ன் விதிமுறைகளின் படி 18.03.2026-ஆம் தேதியன்று பரங்கிப்பேட்டை, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திரு.த.யுவராஜ் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. தனசேகரன் | வயது | : | 42 |
| த.பெ | : | திரு. முத்துக்குமாரசாமி | நிலை | : | **PW-5 (LW-7)** |

**Accused called absent. Defence counsel filed petition u/s 317 of Cr.P.C, perused and allowed. Learned APP is Present.**

**அரசு தரப்பில் முதல் விசாரனை -**

1) நான் தற்போது குறவன்மேடு, மாரியம்மன் கோயில்தெருவில் வசிக்கிறேன். விவசாயம் செய்து வருகிறேன். இந்த வழக்கு விபத்தில் இறந்த திருமாவளவன் எனது ஊர்க்காரர். அவர் நீதிமன்றத்தில் வேலை செய்கிறார். அவர் சுமார் 10 வருடங்களுக்குமுன்பு 2016-ல் இந்நீதிமன்றம் புதியதாக அடிக்கல் நாட்டியபோது அந்த நிகழ்ச்சியை முடித்துவிட்டு வீட்டிற்கு அவரது அப்பாட்சி இருசக்கர வாகனத்தில் சென்றபோது பெரியபட்டுவில் உள்ள பரணி பள்ளியின் மேற்குபக்கமாக கடலூரிலிருந்து சிதம்பரம் வந்த டிப்பர் லாரி ஒன்று லாரிக்கு எதிரே வந்த திருமாவளவனின் இருசக்கரம் வாகனம்மீது லாரியின் டயர் வெடித்து வெள்ளைக்கோட்டை தாண்டி இருசக்கர வாகனம் பக்கம் சென்று திருமாவளவன்மீது மோதி விபத்து ஏற்பட்டதாக அங்கிருந்தவர்கள் போன்மூலமாக தகவல் சொன்னார்கள்.

2) தகவலறிந்து நானும், அழகேசன்,ரகு,சுந்தர்ராஜன் ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தோம். விபத்து ஏற்படுத்திய இடத்தில் லாரி மற்றும் அப்பாட்சி இருசக்கர வாகனம் இருந்தது. திருமாவளவனின் மூளை வெளியேறி கீழே கிடந்தது. பின்னர் திருமாவளவனின் உடலை கடலூர் அரசு மருத்துவமனை சவக்கிடங்கிற்கு எடுத்து சென்றனர். புதுச்சத்திரம் காவல் ஆய்வாளர் திருமாவளவனின் பிரேதத்தின்மீது கடலூர் அரசு மருத்துவமனையில் விசாரணைசெய்தபோது நானும் உடனிருந்தேன். போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

1) நான் விவசாய தொழில் செய்து வருகிறேன். சம்பவம் நடந்தன்று என்ன வேலை செய்தேன் என்றால் வேலைக்கு எதுவும் செல்லவில்லை, ஊரில்தான் கோயில் அருகே இருந்தேன். விபத்து சம்பவம் குறித்து எனக்கு யார் தகவல் சொன்னது என்றால் சுந்தர்ராஜ் என்னிடம் சொன்னார். நாங்கள் இருசக்கர வாகனத்தில் சம்பவ இடத்திற்கு சென்றோம். எங்கள் ஊரிலிருந்து பெரியபட்டு மெயின்ரோட்டிற்கு சுமார் 6-7 கி.மீ தூரம் இருக்கும். அந்த இடத்திற்கு செல்வதற்கு சுமார் 10-15 நிமிடங்கள் ஆகும். நான் வாகனத்தை ஓட்டினேன் என்னுடன் யார் அமர்ந்து வந்தது என்று தற்போது ஞாபகமில்லை. சம்பவ இடத்திற்கு நான் செல்வதற்குமுன் அந்த இடத்திலிருந்து அனைத்தையும் அப்புறம் படுத்திவிட்டார்களா என்றால் இல்லை, நான் செல்லும்போது போலிசார் அங்கிருந்தனர். சம்பவம் நடந்த இடத்தில் அப்போது சுமார் 15-20 நபர்கள் இருந்திருப்பார்கள். போலிசார் வாகன நெரிசலை சரிசெய்து கொண்டிருந்தனர். சம்பவம் நடந்த இடத்தில் போலிசார் என்னுடைய விவரங்களை விசாரித்தார்கள். இறந்தவரின் உடலை மருத்துவமனைக்கு ஏற்றி அனுப்பினார்கள் அப்போது சாட்சி அழகேசன் அங்கிருந்தார். அந்த ஆம்புலன்ஸ்ஸில் அழகேசனும் சென்றுவிட்டார்.

2) மருத்துவமனைக்கு சென்று இறந்தவரின் உடலை பெற்றுக்கொண்டோம். சம்பவம் தொடர்பாக புகார் அளிப்பதற்கு மறுநாள் காவல் நிலையத்திற்கு ஊர்க்காரர்கள் அழகேசன், ரகு, சுந்தர்ராஜன் ரகுராம்சிங் போன்ற இன்னும் சிலருடன் சென்றோம். காவல் நிலையத்திற்கு வந்தவர்களிடம் போலிசார் பெயர், முகவரி போன்ற விவரங்களை எழுதிக்கொண்டனர் என்றால் சரிதான். வந்தவர்களிடம் கையொப்பம் வாங்கினர். நானும் கையொப்பம் போட்டேன். அதன்பிறகு போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் எனக்கு தற்போது ஞாபகமில்லை. இறந்தவர் எனது ஊர்க்காரர், அண்ணன் என்று அழைப்பேன். சம்பவ இடத்திற்கு நான் செல்லவில்லை என்றாலும் இறந்தவர் எனது ஊர்க்காரர் அண்ணன் என்பதாலும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க எனது முதன்மை விசாரணை சாட்சியத்தை சொல்லியுள்ளேன் என்றாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டிய பின்பு அவர் சரியென கையொப்பமிட்டார்.**

**(ஒம். திரு.த.யுவராஜ்)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**பரங்கிப்பேட்டை.**

**மாவட்ட உரிமையியல் மற்றும்  நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**பரங்கிப்பேட்டை.**
**2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம்  18-ஆம் நாள்,**
**CC. 39/2016**

The Oaths Act 1969 (Act 44/1969)-ன் விதிமுறைகளின் படி 18.03.2026-ஆம் தேதியன்று பரங்கிப்பேட்டை, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திரு.த.யுவராஜ் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. சுந்தர்ராஜன் | வயது | : | 54 |
| த.பெ | : | திரு. கோவிந்தசாமி | நிலை | : | **PW-6 (LW-9)** |

**Accused called absent. Defence counsel filed petition u/s 317 of Cr.P.C, perused and allowed. Learned APP is Present.**

**அரசு தரப்பில் முதல் விசாரனை -**

1) நான் தற்போது குறவன்மேடு மாரியம்மன்கோயில் தெருவில் வசிக்கிறேன். வழக்கு விபத்தில் இறந்த திருமாவளவன் எனது ஊர்க்காரர்.27-02-2016-ஆம் தேதியன்று பரங்கிப்பேட்டை நீதிமன்ற அடிக்கல் நாட்டு விழாவிற்கு வந்துவிட்டு திரும்ப அவரது இருசக்கர வாகனத்தில் செல்லும்போது பெரியப்பட்டு பேருந்து நிலையத்திற்கு அருகே பரணி பள்ளிக்கு எதிர்புறமாக உள்ள நெடுஞ்சாலையில்  செம்மண் ஏற்றிவந்த டிப்பர் லாரியில் மோதி இறந்துவிட்டதாக  ராஜா  என்ற ஆட்டோ ஓட்டுநர் போன் மூலமாக தகவல் சொன்னார்கள். உடனடியாக நானும் சிவக்குமார், மகேந்திரன் மற்றும் சிலர் சம்பவ இடத்திற்கு சென்றோம். செல்வதற்குமுன்பாக அவரது மனைவி செந்தாமரைசெல்விக்கு தகவல் சொன்னேன். எங்கள் கிராமத்தில் உள்ள ரகு, தனசேகரன், ஜானகிராமன் மற்றும் சிலருக்கும் தகவல் சொன்னேன். நாங்கள் அனைவரும் சம்பவ இடத்திற்கு சென்று திருமாவளவன் லாரியில் அடிப்பட்டு கிடந்ததை நேரில் பார்த்தோம். அவர் இறந்து கிடந்தார். விபத்து ஏற்படுத்திய லாரி பரணி பள்ளிக்கு அருகில் நின்றது. திருமாவளவனின் இரு சக்கர வாகனம் சிதம்பரம் - கடலூர் நெடுஞ்சாலையில் இடதுபுறமாக சேதமாக கிடந்தது.

2) இறந்த திருமாவளவன் உடலை கடலூர் தலைமை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். சம்பவம் நடந்த மாலையே போலிசார் மருத்துவமனைக்கு வந்து விசாரித்தார்கள். அன்றைய தினமே  கடலூர் அரசு மருத்துவமனையில் திருமாவளவன் உடல்மீது புதுச்சத்திரம்  காவல் ஆய்வாளர் நடத்திய பிரேத விசாரணையின்போது நான் சாட்சியாக உடனிருந்தேன். மறுநாள் காலை 28-02-2016-ஆம் தேதி நான் காவல்

நிலையம் வரும்போது சம்பவ நடந்த இடத்தில் காவல் ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர் ஆகிய இருவரும் நின்றுகொண்டிருந்தனர், என்னை பார்த்ததும் சம்பவத்தைப்பற்றி விசாரித்தனர் நான் சம்பவம் நடந்த இடத்தை சுட்டிக்காட்டினேன். அந்த இடத்தில் போலிசார் வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். பார்வை மகஜரில் நானும்,ரகுராம் சிங் என்பவரும் கையாப்பம் செய்தோம். பார்வை மகஜர் **அ.சா.ஆ.3-**ஆக குறியீடு செய்யப்படுகிறது.போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

1) நான் ஒரு சமூக சேவகர் மற்றும் அரசியல் பிரமுகர். ஊரில் ஏதாவது பிரச்சனை என்றால் காவல் நிலையத்திற்கு போலிசார் என்னை அழைப்பார்கள் என்றால் சரியல்ல. ஊரில் என்னைப்போன்று 10 நபர்கள் இருக்கிறார்கள், அவர்களையும் அழைப்பார்கள். சம்பவம் நடந்தன்று நான் ஊர்க்காரர்களுடன் எப்போது காவல் நிலையம் சென்றேன் என்றால் சம்பம் நடந்தன்று செல்லவில்லை மறுநாள்தான் சென்றேன். அவ்வாறு செல்லும்போது 15-20 நபர்கள் சென்றிருப்போம். அப்பொழுது காவல் நிலைய ஆய்வாளர், உதவி ஆய்வாளர்,காவலர்கள் இருந்தார்கள். பாதிக்கப்பட்ட நபரிடம் புகார் பெற்றுக்கொண்டனர். யார் புகார் அளித்தது என்று எனக்கு தெரியாது நான் அப்போது வெளியே சென்றுவிட்டேன். என்னுடைய விவரங்களை கேட்டனர் அதனை நான் எழுதி போலிசாரிடம் கொடுத்தேன். ஊர்க்காரர்களின் விவரங்களை கேட்டு வாங்கிக்கொண்டனர். பிரதே விசாரணை அறிக்கையில் கையொப்பம் இடச்சொல்லி கேட்டனர் ஊர்க்காரர்கள் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தனர் நானும் கையொப்பம் செய்தேன். அதன்பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை. சம்பவ இடத்தில் வைத்து நான் எந்த கையொப்பமும் செய்யவில்லை என்றாலும் சம்பவ இடத்திலேயே நான் இல்லையென்றாலும் சரியல்ல.

**சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டிய பின்பு அவர் சரியென கையொப்பமிட்டார்.**

**(ஒம். திரு.த.யுவராஜ்)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**பரங்கிப்பேட்டை.**